செ.வெ.எண்: 241/2017 நாள்: 28.03.2017

# பத்திரிக்கை செய்தி

அரசாணை எண்.166, உள் (சிறை -2)த்துறை, நாள் 02.03.2017 ல் பாளையங்கோட்டை மத்திய சிறையின் கட்டுப்பாட்டிலுள்ள கீழ்க்கண்ட சிறைகளுக்கு தலா ஒரு சமையலர் பணியிடம் சிறப்பு ஊதிய விகிதம் ரூ. 4800 - 10000 + தர ஊதியம் ரூ.1400/- என்ற ஊதிய அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

1) பெண்கள் கிளைச்சிறை தக்கலை - 1 பணியிடம் (பெண்)
2) கிளைச்சிறை, குழித்துறை - 1 பணியிடம் (ஆண்)

எனவே, மாவட்ட அளவிலான தேர்வு குழு மூலம் காலிபணியிடங்களுக்கு தகுதியான நபர்கள் நேர்காணல் நடத்தி தேர்வு செய்யப்பட உள்ளனர். இந்த பணிக்கு 18 வயது முதல் 30 வயதுக்குட்பட்ட, 8 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். சமையல் பணியில் இரண்டு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேர்முக தேர்வில் கலந்து கொள்ள விருப்பமுள்ள தகுதி வாய்ந்த நபர்கள் வரும் 10.04.2017 மாலை 05.45 மணிக்குள் "கண்காணிப்பாளர், மத்தியசிறை, பாளையங்கோட்டை" என்ற முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்பலாம். விண்ணப்ப படிவத்துடன் கல்வி சான்று, குடும்ப அட்டையின் நகல், வேலைவாய்ப்பு அடையாள அட்டையின் நகல், சாதிச்சான்றிதழ் நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும் என பாளையங்கோட்டை, மத்திய சிறை கண்காணிப்பாளர் திரு. கோ.பா. செந்தாமரைக்கண்ணன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.